Cr. Misc. 19

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

Calendar Miscellaneous
Preliminary Registered Case No. **SPL.CC. No.9 of 2025**
Sessions

Deposition of Witness for : **PW11 (LW16)**

Name : திருமதி.விசாலாட்சி

Husband Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **22.10.2025.**

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

(இந்த வழக்கில் சாட்சி **விசாலாட்சி** என்பவர் தற்சமயம் சென்னையில் பணிபுரிந்து அங்கேயே வசித்து வருவதால் அரசு தரப்பு வேண்டுகோளின் படி, மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற காணொளி விசாரணை பதிவு விதிமுறைகளை பின்பற்றி, MS Teams இணைப்பு மூலமாக Forensic Science Department, Mylapore, Chennai காணொளி அறைக்கும், அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகளின் வழக்கறிஞர்களுக்கும், இந்நீதிமன்றத்திற்கும் மின்னஞ்சல் மூலமாக காணொளி இணைப்பு கொடுக்கப்பட்டு, உரிய விதிமுறைகளின்படி, Forensic Science Department, Mylapore Chennai திரு. R.செந்தில்குமரன், Assistant Director அவர்கள் முன்னிலையில், தருமபுரி

முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் உள்ள திரு.V.அருண்குமார், System Analayst உதவியுடன் இன்று 22.10.2025 தேதியில் **12.00** மணியளவில் காணொளி விசாரணை தொடங்கப்படுகிறது)

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் சென்னை தடய அறிவியல் துறையில் இயக்குநராக முழு கூடுதல் பொறுப்பில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.02.2016 அன்று நான் அதே துறையில் வேதியியல் பிரிவில் உதவி இயக்குநராக பணியில் இருந்தபோது தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 3/2015 வழக்கில் சம்மந்தப்பட்ட வழக்கு சொத்துக்கள் அடங்கிய உடைபடாத முத்திரையுடன் கூடிய அட்டைப்பெட்டி ஒன்று மற்றும் 29.01.2016 தேதியிட்ட நீதிமன்ற கடிதத்துடன் தலைமை காவலர் எண்.858 திரு.முகுந்த மாதவன் என்பவர் மூலம் ஆய்விற்காக பெறப்பட்டது. அவற்றிற்கு வேதியியல் எண்.52/2016 வழங்கப்பட்டது. அட்டை பெட்டியின் மீதுள்ள முத்திரை நீதிமன்ற கடிதத்தில் கொடுக்கப்பட்டிருந்த மாதிரி முத்திரையுடன் ஒப்பிட்டு பார்த்ததில் முழுமையாகவும் சரியாகவும் இருந்தது. வழக்கு பொருளின் விவரங்கள் தருமபுரி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2015/CP No.11/2015 என்று குறிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட அட்டை பெட்டியை பிரித்து பார்த்த போது அதில் 5 வழக்குசொத்துக்கள் காணப்பட்டன. அவைகள் முறையே

1) மூடி முத்திரையிடப்பட்ட கண்ணாடி பாட்டிலில் 175 மில்லி அளவுள்ள வெளிரிய இள சிவப்பு நிற கரைசல் இருந்தது. பாட்டிலின் மீது ஒட்டப்பட்டிருந்த

லேபிலில் தருமபுரி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2015 எதிரி K.சின்னராஜ் என்பவரின் வலது கை விரல்கள் சம்மந்தப்பட்ட கரைசல் R CP No.11/2015 என்று குறிக்கப்பட்டிருந்தது.

2) மூடி முத்திரையிடப்பட்ட கண்ணாடி பாட்டிலில் 170 மில்லி அளவுள்ள வெளிரிய இள சிவப்பு நிற கரைசல் இருந்தது. பாட்டிலின் மீது ஒட்டப்பட்டிருந்த லேபிலில் தருமபுரி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2015 எதிரி K.சின்னராஜ் என்பவரின் இடது கை விரல்கள் சம்மந்தப்பட்ட கரைசல் L CP No.11/2015 என்று குறிக்கப்பட்டிருந்தது.

3) மூடி முத்திரையிடப்பட்ட கண்ணாடி பாட்டிலில் 170 மில்லி அளவுள்ள வெளிரிய இள சிவப்பு நிற கரைசல் இருந்தது. பாட்டிலின் மீது ஒட்டப்பட்டிருந்த லேபிலில் தருமபுரி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2015 எதிரி K.சின்னராஜ் அவர்களின் சட்டையின் இடது பக்க வெளிப்புற பாக்கெட் சம்மந்தப்பட்ட கரைசல் SP CP No.11/2015 என்று குறிக்கப்பட்டிருந்தது.

4) முத்திரையிடப்பட்ட பிரவுன் நிற பேப்பர் பாக்கெட்டின் உள் சிறிதளவு வெள்ளை நிற பவுடர் பேப்பரில் மடித்து வைக்கப்பட்டு P என்று குறியீடு செய்யப்பட்டிருந்தது. பிரவுன் நிற பேப்பர் பாக்கெட்டின் மீது ஒட்டப்பட்ட லேபிலில் தருமபுரி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2015 பினாப்தலின் பவுடர் மாதிரி P CP No.11/2015 என்று குறிக்கப்பட்டிருந்தது.

5) முத்திரையிடப்பட்ட பிரவுன் நிற பேப்பர் பாக்கெட்டின் உள் சிறிதளவு வெள்ளை நிற பவுடர் பேப்பரில் மடித்து வைக்கப்பட்டு SC என்று குறியீடு

செய்யப்பட்டிருந்தது. பிரவுன் நிற பேப்பர் பாக்கெட்டின் மீது ஒட்டப்பட்ட லேபிலில் தருமபுரி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2015 Sodium Carbonate மாதிரி SC CP No.11/2015 என்று குறிக்கப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட 5 வழக்கு சொத்துக்களை தனித்தனியாக துணை இயக்குநர் திருமதி. பி.கலாராணி அவர்களின் மேற்பார்வையில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

<u>ஆய்வின் முடிவுகள்</u>

1) வழக்கு சொத்து 1,2,3 கரைசல்களில் பினாப்தலின் மற்றும் சோடியம் கார்பனேட் என்ற வேதி பொருள்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

2) வழக்கு சொத்து அயிட்டம் 4ல் உள்ள வெள்ளை நிற பவுடர் பினாப்தலின் என்று கண்டறியப்பட்டது. அதில் சோடியம் கார்பனேட் கண்டறியப்படவில்லை.

3) வழக்கு சொத்து அயிட்டம் 5ல் உள்ள வெள்ளை நிற பவுடர் சோடியம் கார்பனேட் என்று கண்டறியப்பட்டது. அதில் பினாப்தலின் கண்டறியப்படவில்லை.

இதற்கான வேதியியல் பகுப்பாய்வு அறிக்கை வேதியியல் எண். 52/2016 நாள் 05.02.2016 தயார் செய்து நானும் துணை இயக்குநரும் கையொப்பம் இட்டோம். அந்த அறிக்கை **அ.சா.ஆ.18.** ஆய்வறிக்கை மற்றும் பரிசோதனைக்கு உபயோகப்படுத்தியது போக மீதமுள்ள வழக்கு சொத்துக்கள் எங்கள் ஆய்வக முத்திரையுடன் 27.05.2016 அன்று முதல்நிலை காவலர் எண்.698 திரு.ராஜகணபதி என்பவர் மூலம் நீதிமன்றத்திற்கு திருப்பி

அனுப்பிவைக்கப்பட்டது. இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

## <u>குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்)</u>

மாதிரி சாம்பளுடன் இவ்வழக்கின் வரலாறு மற்றும் கேள்விகள் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். வழக்கு விசாரணையின்போது சோடியம் கார்பனேட் கரைசல் தயாரிப்பதற்கு Distilled water or Mineral water உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்றால் அது பற்றிய குறிப்புகள் எனக்கு சொல்லப்படவில்லை. Distilled water or Mineral water உபயோகப்படுத்தப்படாத பட்சத்தில் அந்த கரைசல் contominate ஆக வாய்ப்பு உண்டு என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வழக்கு வரலாற்றில் எந்த அளவுக்கு சோடியம் கார்பனேட் கரைசலுக்கு பயன்படுத்தப்பட்டதற்கான குறிப்பு இருந்ததா என்றால் இல்லை. இவ்வழக்கு பொருட்கள் எந்த தேதியில் சேகரிக்கப்பட்டது என்றால் வழக்கு வரலாற்றின் அடிப்படையில் 05.08.2015 அன்று சேகரிக்கப்பட்டது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட மாதிரிகள் நீதிமன்றத்திற்கு எந்த தேதியில் அனுப்பப்பட்டது என்ற விவரம் வழக்கு வரலாற்றில் உள்ளதா என்றால் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை, CP No.11/2015 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்ற கடித தேதி 29.01.2016. நான் பெற்றது 01.02.2016. நான் ஆய்வு மேற்கொண்ட தேதி 05.02.2016. வழக்கு சொத்துக்கள் அயிட்டம் 1,2,3 கழுத்து பகுதி வரை மட்டும் துணி சுற்றப்பட்டு நூல் கட்டப்பட்டு முத்திரையிடப்பட்டிருந்தது. பாட்டில் மீது சுற்றப்பட்டிருந்த துணியில் Window portion மாதிரி இணைக்கப்படவில்லை,

ஆனால் அதனை பார்க்கும்போது பாட்டில் உள்ளாக திரவம் உள்ளது நன்கு பார்க்க முடிந்தது. கழுத்து பகுதி வரையில்தான் துணியால் கட்டப்பட்டிருந்தது, கீழாக உள்ள பகுதியில் லேபிள் மட்டும் ஒட்டப்பட்டிருந்தது. 72 மணிக்குள் அனுப்பப்பட வேண்டும் என்ற விதிமுறை எதுவும் இல்லை. மிக காலதாமதமாக அனுப்பும்பட்சத்தில் அந்த திரவங்கள் தன்மை மாற வாய்ப்பில்லை. இந்த வழக்கில் சேகரிக்கப்பட்ட பொருட்கள் மிக காலதாமதமாக எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு பொருள் சேகரிக்கப்பட்டு, அது முறையாக பின்பற்றப்படாமல் மிக காலதாமதமாக அனுப்பப்பட்டுள்ள நிலையில் முறையாக "Chain of Custody" முறையாக பின்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**(2ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை)**

(காணொளி விசாரணை மூலம் Forensic Science Department, Mylapore Chennai திரு. R.செந்தில்குமரன், Assistant Director அவர்கள் முன்னிலையில், மேற்படி சாட்சி காணொளி வாயிலாக சொன்னதை, என்னால் இந்நீதிமன்ற தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டுஅவரால் கணினியில் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு, அந்த திரை (Screen) காணொளி மூலம் சாட்சியும் மற்ற இணைப்பில் உள்ளவர்களுக்கும் உடனுக்குடன் பகரப்பட்டு, பின்னிட்டு சாட்சியின் முழு சாட்சியம் மின்னஞ்சல் வழியாக Co-Ordinator மூலம் சாட்சிக்கு அனுப்பப்பட்டு, அங்கு சாட்சிக்கு அது படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, சென்னையில் இன்று 22.10.2025ம் தேதியில் கையெழுத்திடப்பட்டது)

<u>மறு விசாரணை</u>– இல்லை

Taken down by me through VC in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 22.10.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C
Date: 2025.10.22 16:06:09 +0530

Principal Sessions Judge,
Dharmapuri.